Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

M.களத்தூர் கிராம ஊராட்சி தலைவரின் நடவடிக்கைகள்
முன்னிலை: திரு.S.தண்டபாணி

நாள்: 18. 03.2021

பொருள்: மனைப்பிரிவு அங்கீகாரம்-தொட்டியம் வட்டாரம்-M.களத்தூர் கிராம ஊராட்சி-சர்வே எண்கள் 154/13B, 155/1, 155/2, 155/3,மற்றும் 155/4A-ல் 4.19 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி ஒப்புதல் வழங்கப்பட்டது-இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல்-தொடர்பாக.

பார்வை: 1.வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), தொட்டியம் ஊராட்சி ஒன்றியம் கடிதம் ந.க.ஆ3/1961/19, நாள்.20.08.2019 மற்றும் 23.12.2020.

2.மனுதாரர்கள் திரு.K.மனோகரன் மற்றும் திரு.M.மிதுன் ஆகியோர்களின் இணையதள விண்ணப்பம் நாள்.05.08.2019.

3.இணை இயக்குநர், வேளாண்மைத் துறை, திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் எண்.ஈ2/13185/2019, நாள்.29.10.2019.

4.நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.26294/2010எல்ஏ2நாள்.20.12.2010.

5.நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.10433/2012எல்ஏ2 நாள்.22/06/2012

6.தான பத்திர ஆவண எண் 2563/2021.

7.அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.04.6.2004.

8.M.களத்தூர் ஊராட்சிக்கு உரிய கட்டணம் (3% Market Value)செலுத்தப்பட்ட நாள் 18.03.2021.

9.அரசாணை எண்.18,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019.

10.நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் திருச்சி அவர்களின் கடித எண்.ந.க.எண்.09/2021/தி.மா-3 நாள்.24/02/2021

<u>உத்தரவு:</u>

திருச்சி மாவட்டம் M.களத்தூர் கிராம ஊராட்சி சர்வே எண்கள் 154/13B, 155/1, 155/2, 155/3,மற்றும் 155/4A-ல் 4.19 ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைபிரிவு வரைபடம் முறைப்படுத்தப்பட்டு திருச்சி நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்களின் ஒப்புதல் படி மனைபிரிவிற்கு வரைபட எண்ணிட்டு ம.வ/(ந.ஊ)இ.இ(தி.மா)எண் 07/21 வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீடுகள் மற்றும் மனைபிரிவு சாலைகள் ஊராட்சிக்கு பார்வை-6-ல் காணும் தான பத்திரம் மூலம் காட்டுப்புத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் தலைவர் ஊராட்சி மன்றம் M.களத்தூர் பெயரில் தானமாக பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது.

551

மேலும் M.களத்தூர் ஊராட்சி மன்ற தீர்மான எண்.105/2020-21 நாள்.27.11.2020-ன் படி மனை பிரிவில் உள்ள பொது ஒதுக்கீடுகள் மற்றும் மனைபிரிவு சாலைகள் ஊராட்சிக்கு தான பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மனை உட்பிரிவுக்கு (3%Market Value) கட்டணம் பார்வை-8 ன் படி ரூ.60260/-(ரூபாய் அறுபதாயிரத்து இருநூற்று அறுபது மட்டும்) உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே திருச்சிராப்பள்ளி நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்களின் மனைபிரிவு வரைபட தொழில் நுட்ப அனுமதி ம.வ./தி.மா.எண்.07/21-ல் குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனைபிரிவு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது. மேற்காணும் நிபந்தனைகளை மீறினால் மனை பிரிவு அங்கீகாரம் ரத்து செய்திடவும் அதிகாரம் உள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தலைவர் ஊராட்சி மன்றம்
M.களத்தூர் கிராம ஊராட்சி
தொட்டியம் ஒன்றியம்

S. [signature]
தலைவர்
M.களத்தூர் ஊராட்சி.

பெறுதல்

K.மனோகரன் த/பெ காளியப்பன்
க.எண்51A6,K.K.நகர், மோகனூர் ரோடு
நாமக்கல்.

M.மிதுன் த/பெ K.மனோகரன்
க.எண்51A6,K.K.நகர், மோகனூர் ரோடு
நாமக்கல்.

நகல்

1.நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் திருச்சி மாவட்டம்
(அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது)
2.சார்பதிவாளர் சார்பதிவாளர் அலுவலகம்,காட்டுப்புத்தூர், திருச்சி மாவட்டம்
3.ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), திருச்சி
4.வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) தொட்டியம் வட்டாரம் (தகவலுக்காக)

(353)

04 MAR 2021 தொட்டியம்

நகர் ஊரமைப்பு துறை

அனுப்புநர்

திரு. சு. சங்கரமூர்த்தி. பி.இ.,
நகர் ஊரமைப்பு இணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்,
காஜாமலை மெயின் ரோடு, காஜாமலை,
திருச்சிராப்பள்ளி – 620 023
E Mail ID : tryjddtcp@gmail.com

பெறுநர்

தலைவர்,
எம்.களத்தூர் ஊராட்சி
தொட்டியம் ஊராட்சி ஒன்றியம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

ந.க.எண்.09/2021 /திமா–3

நாள். 24.02.2021

அய்யா,

பொருள் : மனைப்பிரிவு – இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – திருச்சிராப்பள்ளி மாவட்டம் – தொட்டியம் வட்டம் – தொட்டியம் ஊராட்சி ஒன்றியம் – எம்.களத்தூர் கிராமம் – சர்வே எண்கள். 154/13B, 155/1, 155/2, 155/3 மற்றும் 155/4A– ல் 4.19 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு – தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுவது – தொடர்பாக.

பார்வை :-

1. வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ). தொட்டியம் ஊராட்சி ஒன்றியம் கடிதம் ந.க.ஆ3/1961/19, நாள்.20.08.2019 மற்றும் 23.12.2020.
2. மனுதாரர்கள் திரு.K.மனோகரன் மற்றும் திரு.M.மிதுன் ஆகியோர்களின் இணையதள விண்ணப்பம் நாள்.05.08.2019.
3. இவ்வலுவலகக் கடிதம் ந.க.எண்.1995/2019 திம2, நாள். 16.08.2019 மற்றும் 18.09.2019
4. இணை இயக்குநர், வேளாண்மைத் துறை, திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் எண். ஈ2/13185/2019, நாள்.29.10.2019.
5. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.26294/2010எல்ஏ2 நாள்.20.12.2010.
6. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.7978/2012எல்ஏ2 நாள்.19.4.2012.
7. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.10433/2012எல்ஏ2 நாள்.22.6.2012.
8. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1995/2019 திம2, நாள். 06.12.2019 (சாலைகள் மற்றும் பூங்கா அமைப்பு வரைபடம் ஒப்புதல் அளிக்கப்பட்டது)
9. அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.04.6,2004.
10. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019.

உத்தரவு:

மேற்காண் பொருள் தொடர்பாக, பார்வை 1 மற்றும் 2–ல் கண்டுள்ள கடிதத்துடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரத்திற்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

உத்தேசக் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் ம.வ/ந.ஊ.இ.இ.(திமா.) **எண்.07/2021** என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது.

மேலும் கீழ்கண்டுள்ள நிபந்தனையை நிறைவு செய்யப்பட்ட பின்னரே மனையிட ஒப்புதல் மனைகள் விற்பனை செய்யப்பட வேண்டும்.

"The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Esate Regulartory Authority".

உத்தேச மனையிடத்திற்கு சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு நிலப்பயன் மாற்ற கட்டணமாக 1899–ம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்தியசட்டம் 2/1899) உட்கூறு AA பிரிவு 47–ன் கீழ் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு நிர்ணயம் செய்து, அதனை வசூலித்து, அரசுக் கணக்குத் தலைப்பின் கீழ் வரவு வைத்து உத்தேசக்கப்பட்டுள்ள கட்டிடப் பணியை மேற்கொள்ள உரிய அனுமதி அளிக்க வேண்டும்.

மேலும், தலைவர், எம்.களத்தூர் ஊராட்சி அவர்களால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை 16(இ)—ன்படி -அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தலைவர், எம்.களத்தூர் ஊராட்சி மன்ற ஒப்புதலுடன், அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு ஒப்புதல் வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும் தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. உள்ளாட்சியால் மனைப்பிரிவு வரைபடத்திற்கு இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னரே மனைப்பிரிவில் எந்தவித அபிவிருத்தியும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேற்படி உத்தேசக் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள் மூன்று தொகுப்புகள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. வரைபடங்கள் மற்றும் நிபந்தனைகளுடன் பெறப்பட்டமைக்கு ஒப்புகைச் சான்று இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் தெரிவிக்கப்படுகிறது.

மனுதாரர் மேற்கொண்டு உத்தரவிற்காக தலைவர், எம்.களத்தூர் ஊராட்சி அவர்களை அணுகுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருச்சிராப்பள்ளி மாவட்டம்

24/12/2021

நாசி
24/12/2021

இணைப்பு:–
வரைபடம் மற்றும் நிபந்தனைகள் 3 –தொகுப்புகள்.

நகல்:-

திரு.K.மனோகரன் மற்றும் திரு.M.மிதுன்,
க.எண்.51A6,
K.K.நகர், மோகனூர் ரோடு,
நாமக்கல் மாவட்டம்.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.

empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate